# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந்* தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்*

[*2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ-14/2013*

## *2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1***. *இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2013, சனவரி 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.* *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

***2***. *இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-* *2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) *அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் “4.5 சதவீதத்தை” என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, “7 சதவீதத்தை” என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலமும்; அத்துடன்*

(ஆ) *அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் “2006 சனவரி 1 ஆம்” “எண்பத்தைந்து சதவீதத்தை” மற்றும் “2013 சனவரி 1 ஆம்” என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக முறையே “2013 சனவரி 1 ஆம்” “எண்பது சதவீதத்தை” மற்றும் “2020 சனவரி 1 ஆம்” என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலமும்.*

***3***. *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.* *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்